**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP. No. 67 / 2021**

**2025ம் வருடம் செப்டம்பர் மாதம் 16 ம் நாள் செவ்வாய்கிழமை**

**ம.சா.1 – ராஜேஸ்வரன்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி**

20.06.2020 அன்று மதியம் 1 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டது. நான் எனது இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்று கொண்டிருந்த போது மானாமதுரை அரசு மருத்துவமனையின் அருகில் விபத்து ஏற்பட்டது. எனக்கு முன்னால் சென்ற கார் திடீரென பிரேக் போட்டதால் இந்த விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஓட்டுனர் உரிமத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. இந்த விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டதாக மானாமதுரை காவல் நிலையத்தில் குற்ற எண் 587/2020 ல் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் அது தவறாக பதிவு செய்துள்ளார்கள். இந்த விபத்து சம்மந்தமாக காவல் துறையின் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் எனது கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என தெரிந்துவிடும் என்பதால் தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது இருசக்கர வாகனம் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர

வாகனத்திற்கு காப்பீடு அமலில் உள்ளது. எனது இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.10 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் மீது தவறு இல்லை என்று காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்று கூறிவிட்டார்கள். விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும் நின்று கொண்டிருந்த 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மீது நான் தான் கவனக்குறைவாக சென்று மோதி விபத்து ஏற்பட்டதாக என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள். நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் அது முழுவதுமாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**